செய்தி வெளியீடு எண்: 104 நாள் : 16.02.2016

## <u>அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம் – 2015</u>

## <u>மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் துவக்க விழா மற்றும் பரிசளிப்பு விழா (15–2–2016)</u>

## <u>மற்றும்</u>

## <u>மாநில விருதுகள், கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கேடயங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா (16–2–2016)</u>

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை பின்பற்றி, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3 ஆம் நாள் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினமாக தமிழகத்தில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. 2015ஆம் ஆண்டிற்கான அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினம் தமிழகத்தில் 16.2.2016 அன்று அனுசரிக்கப்பட்டது.

15–2–2016 அன்று காலை 9.30 மணிக்கு நடைபெற்ற விழாவில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் அண்ணா பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு. முகமது நசிமுத்தீன், இ.ஆ.ப. அவர்கள் 54 வகையான விளையாட்டுப் போட்டிகளைத் துவக்கி வைத்தார்கள். இவ்விழாவில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார். இவ்விழாவில் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

15–2–2016 அன்று மாலை 3.00 மணியளவில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு **மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்கள்** பரிசுகளையும், கேடயங்களையும் வழங்கினார்கள். இவ்விழாவில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார். திருமதி. ச. வளர்மதி, இணை இயக்குநர், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம் அவர்கள் நன்றி தெரிவித்தார்.

16–2–2016 அன்று காலை 9.30 மணிக்கு அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள விவேகானந்தா அரங்கத்தில் மாற்றுத்திறனாளி குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இதில் ஏறக்குறைய அரசு மற்றும் தனியார் சிறப்புப் பள்ளிகளின் 500 மாற்றுத்திறனாளி குழந்தைகள் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

16–2–2016 அன்று மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினம் தொடர்பான அரசு விழாவில் **மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்கள்** மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக சிறந்த முறையில் சேவை புரிந்த சிறந்த சமூகப் பணியாளர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு சிறந்த முறையில் கற்பித்த ஆசிரியர்கள், சிறந்த தொண்டு நிறுவனம், ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர் மற்றும்

மாற்றுத்திறனாளிகளில் சிறந்த பணியாளர்கள் ஆகியோருக்கு மாநில விருதுகள் வழங்கி கௌரவித்தார்கள்.

மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கேடயங்கள் வழங்கியும் விழாப்பேருரை ஆற்றினார்கள்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் அரசு முதன்மைச்செயலாளர் திரு. முகமது நசிமுத்தீன், இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கி வாழ்த்துரை வழங்கினார்.

இவ்விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் டாக்டர். க. மணிவாசன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

திருமதி. ச. வளர்மதி, இணை இயக்குநர், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம் அவர்கள் நன்றி தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**